## புதுவையில் ‘பெஞ்ஜல்’ புயல் தாக்கத்தால்

# 10 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்கள் பாதிப்பு

## 500-க்கும் மேற்பட்ட மரங்கள் சாய்ந்தது

புதுச்சேரி, டிச.2— வங்ககடலில் உருவான பெஞ்ஜல் புயல் நேற்று முன்தினம் புதுச்சேரியை தாக்கியது.

**வரலாறு காணாத மழை**

புதுச்சேரியில் நேற்று முன்தினம் காலை முதல் சூறாவளி காற்றுடன் விடிய, விடிய கனமழை பெய்து கோரதாண்டவம் ஆடியது. இதனால் புதுச்சேரி பகுதி பெரும் சேதத்திற்கு உள்ளானது.

புதுச்சேரியில் வரலாறு காணாத வகையில் 54 செ.மீ மழை கொட்டியது. இதனால் ஆயிரக்கணக்கான வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது. பெரும்பாலான வீடுகளின் தரை தளம் வெள்ளத்தில் மூழ்கியதால் அவர்கள் முதல் மாடியில் தஞ்சம் அடைந்தனர்.

**சாலைகள் மூழ்கியது**

புதுச்சேரி வெங்கட்டா நகர், ரெயின்போ நகர், கிருஷ்ணாநகர் பகுதிகளில் வெள்ளத்தில் சிக்கியவர்களை படகுகள் மூலம் இந்திய ராணுவ வீரர்கள் மீட்டனர். சுமார்

(3–ம் பக்கம் பார்க்க)

மாலைமலர்
செய்திகளை கியூ ஆர்கோடு (QR Code) ஸ்கேன் மூலம் உடனுக்குடன் படிக்கலாம்.






### தத்தளிக்கும் பாகூர்

# தென்பெண்ணை ஆற்றில் வரலாறு காணாத வெள்ளம்

## கிராமங்கள் துண்டிப்பு



தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள காட்சி.

பாகூர் டிச. 2 —

பெஞ்ஜல் புயலின் காரணமாக வெளுத்து வாங்கிய மழை யால் தமிழகம் மற்றும் புதுச்சேரி யில் கடும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

**அணையில் இருந்து நீர் திறப்பு**

புதுவை மற்றும் விழுப்புரம் பகுதிகளில் கிட்டதட்ட 100 செ.மீ. அளவில் மழை கொட்டி தீர்த்தது. இதனால் புதுவை முழுவதும் உள்ள கிராமங்கள், நகரங்கள் தண்ணீரால் சூழ்ந்து காணப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தென்பெண்ணை ஆற்றில் 1, 70,000 கன அடி சாத்தனூர் அணையிலிருந்து நீர் திறக்கப்பட்ட நிலையில் தென்பெண்ணை ஆற்றில் வரலாறு காணாத வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் இரண்டாயிர விளாகம் பாலம், சித்தேரி அணைக்கட்டு, குமந்தான் மேடு தடுப்பணை, மணமேடு தடுப்பணைகள் மூழ்கி சுமார் 15 அடி உயரத்திற்கு தண்ணீர் செல்கிறது. இதனால் கரைக்கு மேலாக தண்ணீர் சென்று கரை ஓரங்களில் உள்ள கிராமங்களில் தண்ணீர் புகுந்துள்ளது.

ஆராய்ச்சிக்குப்பம், குமந்தான்மேடு, சோரியாங் குப்பம், குருவிநத்தம், இருளஞ்சந்தை, திருப்பனாம்பாக்கம், இரண்டாயிரவிளாகம் உள்ளிட்ட கிராமங்களில் ஆற்று நீர் உள்ளே புகுந்து தற்போது பாகூர் நகரத்திற்கு வெள்ளம் நீர் சூழ்ந்து வருகிறது.

அதேபோன்று பாகூர் ஒட்டியுள்ள தமிழக பகுதி யான கரமேடு, அழகிய நத்தம், உள்ளேரிப்பட்டு ஆகிய கிராமங்களிலும் வெள்ளம் புகுந்துள்ளது.

வெள்ளத்திலிருந்து தப்பிக்க அப்பகுதி மக்கள் சிலர் மாடி வீட்டிற்கு செல்கின்றனர். சிலர் மூட்டை முடிச்சுகளுடன் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.


குருவிநத்தம் இருளஞ்சந்தை ரோட்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டவர்கள் மூட்டை முடிச்சுடன் ஊரை விட்டு வெளியேறும் காட்சி.

**தஞ்சம்**

வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்து உள்ளதால் அந்த கிராம மக்கள் ஊரில் இருந்து வெளியேறி அருகில் உள்ள பள்ளி மற்றும் அரசு கட்டிடங்களில் தஞ்சமடைந்து வருகின்றனர். கடந்த 2021 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ள பெருக்கு போல் தற்போதும் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது:

ஆற்றின் நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் பாகூர் ஏரிக்கு நீர் வரத்து அதிகப்படியாக உள்ளது. இதனால் ஏரி உடையும் அபாயம் ஏற்படலாம்.

**பொதுமக்கள் அச்சம்**

மேலும் சேலியமேடு ஓடையில்வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அதனை சுற்றியுள்ள மேல் அழிஞ்சிப்பட்டு, ரெட்டிச்சாவடி உள்ளிட்ட கிராமங்களில் வெள்ள நீர் புகும் அபாயம் உள்ளதால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

**சங்கராபரணி ஆற்றில் வெள்ளம்**

இதுபோல் சாத்தனூர் அணை திறக்கப்பட்டதால் சங்கராபரணி ஆற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆற்றின் கரையோர மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளாது.


உப்பளம் தொகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கென்னடி எம்.எல்.ஏ. பார்வையிட்ட காட்சி.

### மழையால் அனைத்து தரப்பினரும் பாதிப்பு

# 10 ஆயிரம் ஹெக்டேர்...

1-ம் பக்க தொடர்ச்சி

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் தண்ணீர் புகுந்தது.

நகர சாலைகள் அனைத்தும் மழை வெள்ளத்தில் மூழ்கியது. இதனால் வாகன போக்குவரத்து அடியோடு நின்று போனது. நேற்று காலையும் பலத்த காற்றுடன் தொடர்ந்து மழைபெய்தது. இதனால் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வராமல் வீடுகளுக்குள் முடங்கினர்.

நகர பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் கடைகள் ஏதும் திறக்கப் படவில்லை. இதனால் பால் தட்டுப்பாடு ஏற்பட்டது. நகரம் முழுவதும் 500—க்கும் மேற்பட்ட இடங்களில் மரங்கள் முறிந்தும், பெயர்ந்தும் விழுந்தது. சில இடங்களில் மரங்கள் மின் கம்பங்கள், மின் வயர்கள் மீது விழுந்தது. ஒரு சில இடங்களில் மின் கம்பங்களே முறிந்தது.

இதனால் நகர பகுதி முழுவதும் மின்தடை ஏற்பட்டது. தாழ்வான பகுதிகளில் மழைவெள்ளம் புகுந்ததால் அரசு மற்றும் தனியார் பள்ளிகள், சமுதாய நலக்கூடங்கள், நிவாரண முகாம்களாக மாற்றப்பட்டது. தாழ்வான பகுதிகளில் வசித்தவர்களை வருவாய் துறையினர் அப்புறப்படுத்தி முகாம்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

**மீட்பு பணியில் ராணுவம்**

முகாம்களில் ஆயிரக்கணக்கான பேர் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. வீடுகளுக்குள் சிக்கிய 500—க்கும் மேற்பட்டோரை இந்திய ராணுவமும், தேசிய பேரிடர் மீட்பு குழுவினர், புதுச்சேரி போலீசார், தீயணைப்பு துறையினர் மீட்டனர். பெரும் பாலான பஸ்கள், டெம்போக்கள், ஆட்டோக்கள் ஓடவில்லை.

வரலாறு காணாத புயல், கனமழை, சூறாவளி காற்றால் புதுச்சேரி மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது. சங்கராபரணி, தென்பெண்ணை ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. பல இடங்களில் வெள்ள நீர் கிராமங்கள், வயல் வெளிக்குள் புகுந்த்து. மழை வெள்ளமும் வயல்களில் புகுந்தது. புதுச்சேரி, காரைக்காலில் பெய்த தொடர் மழையால் 3 முதல் 5 அடி வரை தண்ணீர் தேங்கி பயிர்கள் நாசமாகியுள்ளது. வாழை, கரும்பு பயிர்கள் சரிந்து கிடக்கிறது.

பாதிக்கப்பட்ட விளை நிலங்களை அமைச்சர் தேனீ. ஜெயக்குமார், வேளாண்துறை இயக்குனர் வசந்தகுமார் ஆகியோர் பார்வையிட்டனர். நீரில் மூழ்கிய பயிர்களை காண்பித்து விவசாயிகள் கண்ணீர் விட்டனர். அவர்களுக்கு அமைச்சர் தேனீ.ஜெயக்குமார் ஆறுதல் கூறினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:—

புதுச்சேரியில் 5ஆயிரத்து 700 ஹெக்டேரும், காரைக்காலில் 4 ஆயிரத்து 400 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளது. வீடூர் அணை திறக்கப்பட்டதால் மணலிப்பட்டு, கூனிச்சம்பட்டு பகுதி விவசாய நிலங்களில் தண்ணீர் புகுந்துள்ளது. பயிர் பாதிப்பு குறித்து கள ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.